மனிதரைப் பிடிப்பாய்

(ம.யோவேல்)

(7,எம்.எல்.பிள்ளைநகர், பாளையங்கோட்டை)

9486427979

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

இறைவனை வணங்குவோம்

ஆதியு மந்தமு மில்லா அருள்வரன்
அண்டங்கள் யாவும் படைத்தவன்
நீதியும் நேர்மையும் நின்னைய நன்னெறியும்
நீங்கா நிலையி லுடையவன்
ஓதியே ஒண்மறை ஒன்றியே காண
ஒளிமேனி உண்மையாய் உள்ளவன்
அருவழியை அறிந்துநிதம்
அருமறையைத் தெளிந்துநல
உருவடியை அடைந்திசையென்
உருமலரைச் சொரிந்திடுவம்
அருமலருள் ஆள்வன் அமர்ந்து.

(இசைத்தமிழ் யாப்பு – ஒயிற்கும்மி)

அன்புடையீர்,

அருள்நாதர் இயேசுவின் மாணாக்கருள் முதலிடம் பெற்றவர் பேதுரு. இவருடைய முந்தின பெயர் சீமோன், இவர், தம் இளவல் அந்திரேயாவால் அழைத்துவரப் பெற்று இயேசு நாதரைக் கண்டு மகிழ்ந்தார். இயேசுநாதரும் அவ்வேளை அரமேய மொழியில் பாறை என்னும் பொருள் கொண்ட 'கேபா' என்னும் மறுபெயரை இச்சீமோனுக்குச் சூட்டினார். கேபா என்பது கிரேக்கமொழியில் 'பெத்ரோஸ்'. இது தமிழ்மொழியில் பேதுரு எனப்படுகிறது.

இப்பெருமகனார் பேதுருவின் வரலாற்றிலே கூறப்படும் முற்பகுதி நிகழ்வுகள், இசைத்தமிழ்ப் பாடல்களின் வாயிலாய் 'மனிதரைப் பிடிப்பாய்' என்ற தலைப்பின் கீழ்க் கூறப்படுகின்றன, இச்சிறுநூலைச் சிறந்த முறையில் அச்சிட்டுதவிய G.P.R ஆப்செட் அச்சகத்தார்க்கு நனி நன்றி.

இன்னணம்,
இந்நூல் பற்றிய தங்கள்
கருத்துக்களை அறிய விழையும்
ம.யோவேல்

பாளையங்கேட்டை
27.02.2013

மனிதரைப் பிடிப்பாய்

(ம.யோவேல்)

1. இறைவேண்டல்

(இறைவனே! திருத்தூதர் பேதுருவின் வரலாற்றை எழுத அருள் தருக)

அருள்நாதர்க் கண்ணி

சொல்லாய்த் தொழில் முதலாய் எல்லாம் அறிந்ததிரு
ஒல்காப் பெரும்பொருளே ஒண்ணோர் அருள்நாதா! (1)

உள்ளுடல் சொல்காலம் ஒண்பொரு ளேதிடம்
கொள்ளக் கடந்தவனே கோனே அருள்நாதா! (2)

காணியம் முன்னாலே காசினியில் தோன்றிடப்
பேணிய தன்மையாற் போந்தாய் அருள்நாதா! (3)

காண வியலானே கண்டிடக் கன்னியின்
பேணநல் மைந்தானாய் பேரன் பருள்நாதா! (4)

வாழ வழிகாட்டி வையகத்தில் வீண்மறம்
தாழ அறவுரைகள் தந்தாய் அருள்நாதா! (5)

அற்புதஞ் சீரடை யாளங்கள் காட்டித்தன்
பொற்புடைப் போதம் புகன்றாய் அருள்நாதா! (6)

செல்லா யரிக்கச் சிவணிய மறமெல்லாம்
வெல்வானாய் வந்தனை வேந்தா அருள்நாதா! (7)

இயற்கைப் பொருளெல்லாம் எண்ணி வியக்க
மயற்கை மனிதனிறை மாண்போய் அருள்நாதா! (8)

உன்னை யெணியுளில் ஊன்று விசுவாசம்
மன்ன வடிமாலை வேய்ந்தேன் அருள்நாதா! (9)

உன்ற ணடியானாம் ஒண்பார் வரலாற்றை
நன்ன ரெழுதவருள் நல்காய் அருள்நாதா! (10)

(இசைத்தமிழ் யாப்பு: விளிப் பெயர்க் கண்ணி)

காப்பு

2. பாருய்ய நற்செய்தி பாங்காய்ப் புகன்ற
பரனருட் பேதுருப் பாவுரைக்கப்
பரமத்திரு நகரத்தினில்
புரருற்றிடும் அருள்பெற்றிட
பரவொளி நாதன்நற் காப்பு .

(இசைத்தமிழ்யாப்பு : ஒயிற்கும்மி)

3. பேதுரு வரலாறு சொல்வேன்

பொல்லாத பாவம் பொசுக்கென்று போகவே
நல்லாவி பெற்றிட நாதரன்பு
போற்றி மனமாற்றி யுளமூற்றிப் புகழ்சாற்றிப்
புகல்வேனே பொற்பாறை வாழ்வு .
(பாறை–பேதுரு)

இசைத்தமிழ் யாப்பு – ஒயிற்கும்மி

4. பயன்

தோயும் திருமறை ஆயும் பொழுதது
துன்ன மனங்களிக்கும் – தெளிவாய்ப்
பன்னச் சுவையளிக்கும்–உலர்ந்து
மாயும் உயிர்க்கு மயக்க மகற்றவே
மாண்பு நனிதுளிர்க்கும்.

(அது–பேதுரு அடிகளாரின் வாழ்வு. இசைத்தமிழ்யாப்பு – ஒயிற்கும்மி)

5. பேதுருவின் ஊர்

பாரினிலே ஏலேலம் பாங்குளதே – போற்றும்
பாலுந்தேன் ஏலேலம் பாய்நாடாம்
பாலத்தீன் ஏலேலம் பேருபெற்றே–சீரார்
பல்நாட்டார் ஏலேலம் போற்றுமதன்
வண்வடந்தை ஏலேலம் காலிலேயா – ஓங்க
ஒண்செய்யும் ஏலேலம் யோருதானே (1)

ஏரியினில் ஏலேலம் ஊடுவந்த–ஆற்றின்
இருகரையில் ஏலேலம் ஒரூராம்
ஏற்றமிகு ஏலேலம் வண்மைபெற்று – சாற்றும்
ஏர்பெற்ற ஏலேலம் பெத்துசாய்தா
வாணிகத்தில் ஏலேலம் பேருபெற்ற –அங்கு
வாழ்ந்தாரே ஏலேலம் சீமோனே (2)

(இசைத்தமிழ்யாப்பு: ஏலேலக் கும்மி)

6. பேதுருவின் கூட்டாளிகள்

சீமோனின் நண்பரோ யாக்கோபும் யோவானும்
சீரந்தி ரேயாவோ தம்பி அய்யா (1)
அன்புள்ளங் கொண்ட இவரெல்லாம் பன்மீனை
ஆற்றில் பிடிக்குந் தொழிலரய்யா (2)
ஆற்றினில் மட்டுமல் லாது கலிலேயா
ஆழ்கடல் மீனும் பிடிப்பரய்யா (3)
பற்றிய மீனையுங் கப்பர்நா கூமிலே
பாங்குடன் வாணிகஞ் செய்வரய்யா (4)
சீமோனுக் கோரில்லம் கப்பர்நா கூமிலே
செம்மை யுறவே யிருந்ததய்யா (5)
நண்பர்கள் நால்வரும் கான்முனி யோவானின்
நற்போதம் ஏற்றிட்ட சீடரய்யா (6)
(இசைத்தமிழ்யாப்பு : ஓரடிக்கும்மி)

7. முழுக்குமுனிவரும் அவர்தம் சீடரும்

ஆன்ற ஒழுக்கமும் ஏன்ற துணிவதும்
ஏற்றமாகக் கொண்டவன் – உயர்
அன்புக் கனிகளை இன்ப முறப்பெற
அழுத்த மாக விண்டவன்

ஊன்று வகையிலே சான்று நிலையிலே
உள்ளம் பாய்வுரை தந்தவன்–மிக
முன்னைத் தந்தையை உன்னிப் புகழ்வதோ
உதவா தென்றே நொந்தவன் (1)

வெட்டுக் கிளியையுங் காட்டு நறவையும்
உணவாய்த் தனக்குத் தெரிந்தவன்–வளர்
ஒட்டை மயிரினால் கட்டு முடையினை
உடுத்திக் கொண்டு திரிந்தவன்

கெட்டுத் திரிந்திடும் மட்டு வறிஞரும்
கேட்டு வாழத் தெளிந்தவன்–தனைக்
கிட்டி வருபவர் ஒட்டி வாழ்முறை
சுட்டி நன்மை பொழிந்தவன் (2)

மறநெறி மறைந்திட அறநெறி உறைந்திட
மாணுரை வழங்கி நின்றவன்–மனு
மனமது திரும்பிட குணமது பொருந்திட

முழுக்கினை அளித்து வென்றவன்
திறநெறி ஊட்டினன் திருநாதர் காட்டினன்
தேமறி யஃதே யென்றனன் - அதால்
இணையவன் சீடரும் முனையுரை ஓர்ந்துடன்
யேசுவின் பின்னே சென்றனர் (3)

(சீடர் - அந்திரேயா, மற்றொருவர். இசைத்தமிழ் - சமனிலைச்சிந்து)

8. இயேசுநாதரின் வினவல்

இன்னினியர் ஈசனவர் காண வருவார் - தமை
ஈடிலவர் பின்தொடரப் பேண நினைவார்
பின்திரும்பித் தேடுவதென் சொல்க வெனவே-சொன்னால்
பீடுறுவீர் போதகரே போற்றுவம் என்பார்

(இசைத்தமிழ் யாப்பு - சமனிலைச் சிந்துக்கண்ணி)

9. வணக்கம் சொல்லல்

எடுப்பு

நாத வந்தனமே - கிறித்தேசு
நாத வந்தனமே

தொடுப்பு

நாத ருலகிய லேதர் நலமருள்
வேதர் புகழ்பெறு கீதர் மனுவுயர்
யூத ருலகவ ராத ருயரளி
ஈதர் மறைபொருட் போதர் எனமொழி (நாத)

முடிப்பு

பின்னோர் வருதலில் முன்னோர் இருத்தலில்
மின்னார் ஒளியினர் தன்னோர் தகையுளர்
உன்னோர் இறைமறி இன்னார் பவந்தவிர்
நன்னார் இளமறி பன்னும் இவர்நமின்
சொன்னோர் வழியினர் இன்னார் எனயிவண்
சொன்னேன் புறாவென விண்ணோர் வருதலை
நன்னோர் அறிந்துகண் கொண்டேன் இவர்தமின்
இன்கா லணிகளை தன்மை யிலன்சொலும் (நாத)

(இசைத்தமிழ்யாப்பு - கீர்த்தனை)

10. தங்கிமீளல்

துங்கனைப் பார்த்துப் போற்றித்
தொற்றினார் 'நீவிர் எங்குத்
தங்கியே யுள்ளீர்' என்னத்

தன்னையுள் ளெங்கு முள்ளார்
பங்கமிற் சொல்லால் 'வந்து
பார்மினோ' வென்று சொன்னார்
அங்கவர் தங்கி மீண்டார்
ஆன்றுரைத் தேனு கர்ந்தே!
(யாப்பு - அறுசீராசிரியம்)

11. அந்திரேயா தன் அண்ணன் சீமோனைக் கண்டு கூறல்

பொருணிறை துணிவுரை பொழியற நெறியதில்
புவிசெல வியல்வன முனிவரி னடிவழி
அண்ணா சீமோ னண்ணா
பொருவறு வலியுறு வுயவரு மிவரென
உயர்முனி வுரைவழி நிழலென நடந்தனம்
கண்டோம் வாய்மை கொண்டோம்.(1)
எனவுள வலிமிகு விளவல னுரையிட
வெழுநலன் துடியுளன் வருகுவ னெனமொழி
அண்ணன் சீமோன் அண்ணன்
மனநல மிகலுற மருள்பவ மழிவுற
அருணலம் பொழிவுற அணுகின னண்ணலை
அண்ணன் சீமோன் அண்ணன் (2)
(இசைத்தமிழ் யாப்பு - குறில்வண்ணங்கொண்ட
போற்றியற் (காவடிச்)சிந்து)

12. அந்திரேயாவும் சீமோனும் ஆண்டவரைக் கண்டு மீளல்

அண்ணல்பால் ஆவலாய் வந்திடவே - உயர்
ஆண்டவன் பேரருள் தந்திடவே
எண்ணியே வந்தாரை நோக்கிடவே - அன்னார்
ஏற்ற பணிவுடன் பார்த்திடவே 1

இன்ப வுரைபல ஆற்றினரே - யேசு
அன்புடன் சீமோனை நோக்கினரே
அன்பரே யோனாசேய் கேட்குவீரே - கேபா
என்ற பெயரினி ஏற்குவீரே 2
அந்திரே யாவுடன் வந்தவண்ணன் - மிகு
ஆனந்த மாகவே விந்தைவண்ணன்
சிந்தை மகிழ்ந்தாசி கூறிடவே - போற்றிச்
சென்றனர் தம்மில்லம் ஏகிடவே, 3
(இசைத்தமிழ்யாப்பு - தனிச்சொல் பெற்ற இயற்கும்மி)

முழுக்கினை அளித்து வென்றவன்
திறநெறி ஊட்டினன் திருநாதர் காட்டினன்
தேமறி யஃதே யென்றனன் – அதால்
இணையவன் சீடரும் முனையுரை ஓர்ந்துடன்
யேசுவின் பின்னே சென்றனர். (3)
(சீடர் – அந்திரேயா, மற்றொருவர். இசைத்தமிழ் – சமனிலைச்சிந்து)

8. இயேசுநாதரின் வினவல்

இன்னினியர் ஈசனவர் காண வருவார் – தமை
ஈடிலவர் பின்தொடரப் பேண நினைவார்
பின்திரும்பித் தேடுவதென் சொல்க வெனவே–சொன்னால்
பீடுறுவீர் போதகரே போற்றுவம் என்பார்.
(இசைத்தமிழ் யாப்பு – சமனிலைச் சிந்துக்கண்ணி)

9. வணக்கம் சொல்லல்

எடுப்பு

நாத வந்தனமே – கிறித்தேசு
நாத வந்தனமே

தொடுப்பு

நாத ருலகிய லேதர் நலமருள்
வேதர் புகழ்பெறு கீதர் மனுவுயர்
யூத ருலகவ ராத ருயரளி
ஈதர் மறைபொருட் போதர் எனமொழி (நாத)

முடிப்பு

பின்னோர் வருதலில் முன்னோர் இருத்தலில்
மின்னார் ஒளியினர் தன்னோர் தகையுளர்
உன்னோர் இறைமறி இன்னார் பவந்தவிர்
நன்னார் இளமறி பன்னும் இவர்நமின்
சொன்னோர் வழியினர் இன்னார் எனயிவண்
சொன்னேன் புறாவென விண்ணோர் வருதலை
நன்னோர் அறிந்துகண் கொண்டேன் இவர்தமின்
இன்கா லணிகளை தன்மை யிலன்சொலும் (நாத)
(இசைத்தமிழ்யாப்பு – கீர்த்தனை)

10. தங்கிமீளல்

துங்கனைப் பார்த்துப் போற்றித்
தொற்றினார் 'நீவிர் எங்குத்
தங்கியே யுள்ளீர்' என்னத்

தன்னையுள் ளெங்கு முள்ளார்
பங்கமிற் சொல்லால் 'வந்து
பார்மினோ' வென்று சொன்னார்
அங்கவர் தங்கி மீண்டார்
ஆன்றுரைத் தேனு கர்ந்தே!
(யாப்பு – அறுசீராசிரியம்)

11. அந்திரேயா தன் அண்ணன் சீமோனைக் கண்டு கூறல்

பொருணிறை துணிவுரை பொழியற நெறியதில்
புவிசெல வியல்வன முனிவரி னடிவழி
அண்ணா சீமோ னண்ணா
பொருவறு வலியுறு வுயவரு மிவரென
உயர்முனி வுரைவழி நிழலென நடந்தனம்
கண்டோம் வாய்மை கொண்டோம். (1)
எனவுள வலிமிகு விளவல னுரையிட
வெழுநலன் துடியுளன் வருகுவ னெனமொழி
அண்ணன் சீமோன் அண்ணன்
மனநல மிகலுற மருள்பவ மழிவுற
அருணலம் பொழிவுற அணுகின னண்ணலை
அண்ணன் சீமோன் அண்ணன் (2)
(இசைத்தமிழ் யாப்பு – குறில்வண்ணங்கொண்ட
போற்றியற் (காவடிச்)சிந்து)

12. அந்திரேயாவும் சீமோனும் ஆண்டவரைக் கண்டு மீளல்

அண்ணல்பால் ஆவலாய் வந்திடவே – உயர்
ஆண்டவன் பேரருள் தந்திடவே
எண்ணியே வந்தாரை நோக்கிடவே – அன்னார்
ஏற்ற பணிவுடன் பார்த்திடவே 1

இன்ப வுரைபல ஆற்றினரே – யேசு
அன்புடன் சீமோனை நோக்கினரே
அன்பரே யோனாசேய் கேட்குவீரே – கேபா
என்ற பெய~~ரினி ஏற்குவீரே~~ (நாமம் கொன்றனரே) 2
அந்திரே யாவுடன் வந்தவண்ணன் – மிகு
ஆனந்த மாகவே விந்தைவண்ணன்
சிந்தை மகிழ்ந்தாசி கூறிடவே – போற்றிச்
சென்றனர் தம்மில்லம் ஏகிடவே, 3
(இசைத்தமிழ்யாப்பு – தனிச்சொல் பெற்ற இயற்கும்மி)

13. ஊழியஞ்செய்ய அழைப்பு

நாதர் ஆழிக் கரையோரம்
நடந்து வந்த அந்நேரம்
ஆதர் சீமோன் ஆந்திருதம்
அம்வலை வீசப் பார்த்தாரே
ஆதர் சீமோன் ஆந்திருதம்
அம்வலை வீசப் பார்த்திடவே
சேத மின்றி இருவரையும்
சேர்க்க எண்ணி அழைத்தாரே. (1)

ஏந்தல் கண்ட இருவருமே
இணைந்து வந்து வணங்கினரே
போந்த யேசும் ஏற்றவரைப்
பின்னே வம்மின் என்றாரே.
போந்த யேசும் ஏற்றவரைப்
பின்னே வம்மின் என்றதுவோ
வாய்ந்த மனிதர் பிடித்திடுவீர்
வாக்கைக் கேட்பீர் என்பதற்கே (2)

வலைகள் விட்டுப் பின்வந்த
வலைஞர் இருவ ருடனேகி
அலையார் கடலின் கரையோரம்
வலைசீர் செய்வார் பார்த்தாரே
அலையார் கடலின் கரையோரம்
வலைசீர் செய்வார் பார்த்ததுவோ
உலையா வுள்ளம் உலகுகொள
உவந்து சீராய் ஆக்குதற்கே. (3)

அங்கு யோவான் யாக்கோபை
அழைத்தார் அன்பு மேலிடவே
தங்கு தடையில் லாமலவர்
தகையார் பின்னே சென்றாரே
தங்கு தடையில் லாமலவர்
தகையார் பின்னே சென்றசெயல்
எங்கு மேசு நாமமதை
எடுத்துச் சொல்வோர் ஆக்கிற்றே. (4)

(இசைத்தமிழ் யாப்பு – வரிப்பாட்டு)

14. ஆண்டவர் ஊழியத்தில் அற்புதங்காணல்

பண்: நவரோஜ் தாளம்: ஆதி

வஞ்சி விருத்தம்

(சந்தம்-தன்னா தானனத் தனந்தனானா)

அன்பால் சீடரைத் தெரிந்தாரே
நன்பால் பார்செலத் திரிந்தாரே
இன்பார் சேர்வழி பொழிந்தாரே
தன்பால் நாடுறத் திகழ்ந்தாரே.

(சந்தம்-தன்னா தானன தனத்தனானா)

பொல்லாப் பேய்களுந் துரத்தினாரே
எல்லா நோய்களும் அகற்றினாரே
நல்லார் பேறும் உணர்த்தினாரே
சொல்லால் வானிலம் விளக்கினாரே.

(இசைத்தமிழ்யாப்பு – கீதம்)

15. கேபா தொடர்ந்து அற்புதங்காணல்

அன்பரா மேகவை யண்டிய கேபாவும்
ஆலய மாழிபால் சென்றனரே
இன்பமாய்ப் போதனை கேட்டதோ டன்றியே
ஈடில்லா அற்புதங் கண்டனரே. (1)

சொல்லாலே நூற்றுறைய்யன் நம்பிக்கை கண்டவன்
சொல்லார்சொல் லாலேநோய் நீக்கினாரே
பொல்லாத ஆவிகள் போகிட ஓட்டியே
போந்தார்க்கு நன்னல மாக்கினாரே. (2)

அங்கங் குறைந்தே யழுகச்செய் தீநோயன்
ஆண்டவர் சித்தத்தை வேண்டிநின்றான்
துங்கனுந் தங்கரம் நீட்டியே தொட்டிடச்
சுத்தனாய் மாறியே போற்றிநின்றான். (3)

கட்புல மற்றவர் காட்சிகள் கண்டனர்
காதுகே ளாதவர் கேட்டனரே
குட்டம் முடவாதம் சப்பாணி நோயுள்ளோர்
கூறுஞ்சீர் பெற்றுமே வாழ்ந்தனரே. (4)

13. ஊழியஞ்செய்ய அழைப்பு

நாதர் ஆழிக் கரையோரம்
நடந்து வந்த அந்நேரம்
ஆதர் சீமோன் ஆந்திருதம்
அம்வலை வீசப் பார்த்தாரே
ஆதர் சீமோன் ஆந்திருதம்
அம்வலை வீசப் பார்த்திடவே
சேத மின்றி இருவரையும்
சேர்க்க எண்ணி அழைத்தாரே. (1)

ஏந்தல் கண்ட இருவருமே
இணைந்து வந்து வணங்கினரே
போந்த யேசும் ஏற்றவரைப்
பின்னே வம்மின் என்றாரே.
போந்த யேசும் ஏற்றவரைப்
பின்னே வம்மின் என்றதுவோ
வாய்ந்த மனிதர் பிடித்திடுவீர்
வாக்கைக் கேட்பீர் என்பதற்கே. (2)

வலைகள் விட்டுப் பின்வந்த
வலைஞர் இருவ ருடனேகி
அலையார் கடலின் கரையோரம்
வலைசீர் செய்வார் பார்த்தாரே
அலையார் கடலின் கரையோரம்
வலைசீர் செய்வார் பார்த்ததுவோ
உலையா வுள்ளம் உலகுகொள
உவந்து சீராய் ஆக்குதற்கே. (3)

அங்கு யோவான் யாக்கோபை
அழைத்தார் அன்பு மேலிடவே
தங்கு தடையில் லாமலவர்
தகையார் பின்னே சென்றாரே
தங்கு தடையில் லாமலவர்
தகையார் பின்னே சென்றசெயல்
எங்கு மேசு நாமமதை
எடுத்துச் சொல்வோர் ஆக்கிற்றே. (4)

(இசைத்தமிழ் யாப்பு – வரிப்பாட்டு)

14. ஆண்டவர் ஊழியத்தில் அற்புதங்காணல்

பண்: நவரோஜ் தாளம்: ஆதி

வஞ்சி விருத்தம்

(சந்தம்–தன்னா தானனத் தனந்தனானா)

அன்பால் சீடரைத் தெரிந்தாரே
நண்பால் பார்செலத் திரிந்தாரே
இன்பார் சேர்வழி பொழிந்தாரே
தன்பால் நாடுறத் திகழ்ந்தாரே.

(சந்தம்–தன்னா தானன தனத்தனானா)

பொல்லாப் பேய்களுந் துரத்தினாரே
எல்லா நோய்களும் அகற்றினாரே
நல்லார் பேறறம் உணர்த்தினாரே
சொல்லால் வானிலம் விளக்கினாரே.

(இசைத்தமிழ்யாப்பு – கீதம்)

15. கேபா தொடர்ந்து அற்புதங்காணல்

அன்பரா மேசுவை யண்டிய கேபாவும்
ஆலய மாழிபால் சென்றனரே
இன்பமாய்ப் போதனை கேட்டதோ டன்றியே
ஈடில்லா அற்புதங் கண்டனரே. (1)

சொல்லாலே நூற்றைய்யன் நம்பிக்கை கண்டவன்
சொல்லார்சொல் லாலேநோய் நீக்கினாரே
பொல்லாத ஆவிகள் போகிட ஒட்டியே
போந்தார்க்கு நன்னல மாக்கினாரே. (2)

அங்கங் குறைந்தே யழுகச்செய் தீநோயன்
ஆண்டவர் சித்தத்தை வேண்டிநின்றான்
துங்கனுந் தங்கரம் நீட்டியே தொட்டிடச்
சுத்தனாய் மாறியே போற்றிநின்றான். (3)

கட்புல மற்றவர் காட்சிகள் கண்டனர்
காதுகே ளாதவர் கேட்டனரே
குட்டம் முடவாதம் சப்பாணி நோயுள்ளோர்
கூறுஞ்சீர் பெற்றுமே வாழ்ந்தனரே. (4)

அற்புதஞ் செய்திட்ட ஆண்டவ ரோடுதம்
அன்பில்லம் போந்தேயு ளம்நெகிழ்ந்தார்
பொற்பரன் அங்கவர் மாமியின் நோய்தன்னைப்
போக்கிடக் கேபாம னம்மகிழ்ந்தார் (5)

(இசைத்தமிழ் யாப்பு - தனிச்சொல்லின்றி வந்த இயற்கும்மி)

(போதகம் புரிந்தும் அற்புதங்கள் நிகழ்த்தியும் அசுத்த ஆவிகளை ஒட்டியும் வந்த நம் அருள்நாதர் இயேசு ஒருநாள் கெனேசரேத்துக் கடலோரம் நின்று போதகம் புரிந்தபின் செய்த அற்புதத்தை இனிக் காணலாம்.)

16. இதுமுதல் மனிதரைப் பிடிப்பாய்

அன்புடனே அண்டிவரும் நாதர் - துதி
அகமுறவே சொல்லுவோர்க்கவ் வேதர் - அருள்
ஆன்றவிதம் நன்மைதரத்
தோன்றநிதம் ஈந்தளிக்கும் ஆயர் நல்ல நேயர்
இன்புறவே நாம்நடக்கச் செய்வார் - தமை
அண்டியவர்க் கொண்டுவரங்கள் பெய்வார் - பரர்
என்றுமவர் தண்ணிழலே
பொன்றலிலா விண்ணிலவே
ஈசர் பவ நாசர் (1)

தண்வளியு லாவுகட லோரம் - தூயர்
தம்வழியே மேவுமந்த நேரம் - பலர்
சந்தமுறக் கண்மலர
விந்தையுரை கேட்டறியச்
சார்ந்தார் நாதர் ஓர்ந்தார்.

கண்மணியா யங்கவரைக் கொண்டார் - விணின்
கருத்துரையை அன்புடனே விண்டார் - நலங்
கற்றிடவே படகுரையை
உற்றிடவே மக்களுளம்
கொண்டார் நறா வுண்டார். (2)

பொன்னுரையை யாற்றியதன் பின்னர் - கேபா
போந்தனனே நாதரேசு முன்னர் - மீட்பர்
புகலுரையைக் கேட்டிவே
தகவுடனே ஆற்றிடவே
போந்தான் தாழச் சார்ந்தான்

நன்னவரும் படகினைநீர் ஆள்க – ஆழ்வில்
நன்வலையை வீசிடுக மூழ்க – என்ன
நாதஇர வெல்லாம்யாம்
வேதனையோ டேமுயன்றும்
நல்லை மீனோ இல்லை. (3)

இன்னவரே உம்முரையைக் கேட்டு – வீசி
இமிழ்கடலில் வலைதனையே போட்டு – போற்றி
இம்மையினில் வேண்டுநலன்
செம்மையெனில் கண்டிடுவன்
ஈசா அருள் நேசா.
என்றவனும் சொன்னபடி செய்தான் – உடன்
இயங்கியோரும் வியந்திடவே பார்த்தான் – வலை
இற்றிடவே மீன்பலவு
முற்றிடவே வேற்றவரை
ஏற்றான் கூவிச் சேர்த்தான். (4)

பேருதவி வந்தநண்பர் செய்தார் – மீனைப்
பெரும்படகி ரண்டிலும்நி றைத்தார் – அங்கு
பேதுருவும் வியப்புகொண்டு
ஏதுறுமு யர்வு கண்டு
போந்தான் யேசு சார்ந்தான்.
ஒருதற்கு ரியார்பாதம் வீழ்ந்தான் – நாத
ஒன்றுபவ முள்ளனெனச் சோர்ந்தான் – தூயர்
ஒழித்திடுவாய் இனிபயமே
பிடித்திடுவாய் மனிதரையே
உவப்பாய் என்றார் நயப்பாய் (5)

இசைத்தமிழ் யாப்பு – போற்றியற் சிந்து (காவடிச் சிந்து)

17. (திரளான மீன்களைப் பிடித்ததினிமித்தம் சீமோனுக்கும் அவனுடனிருந்த யாக்கோபு, யோவான் முதலானோருக்கும் பெருவியப்பு ஏற்பட்டது, எனவே அவர்களெல்லாரும் அருள்நாதர் இயேசுவைப் போற்றினார்கள்.)

இறைபோற்றல்

பரம பதத்தன்
        அருளு முளத்தன்
        பழுதில் நலத்தன் – பெருமானே
வரமெய் திறத்தன்
        கடமை சுரத்தன்
        வலிமை யுரத்தன் – திருவோனே
தரமு முயர்த்தும்
        தினமு முணர்த்துந்
        தகைய வளத்தன் – அருளோனே
உரமுள் நினைத்து
        வழியை யடுத்து
        உளமும் படைப்பம் – பொருளோனே.

(யாப்பு: வண்ணப்பா
சந்தம்: தனன தனத்த
        தனன தனத்த
        தனன தனத்த – தனதானா.

இஃது இரு சந்தச் சீராலான வண்ணத் தொடர்கள் கொண்ட நான்கு தொங்கல்கள் அமைந்த வண்ணப்பா)

அருஞ்சொற்பொருள்

அடி	– பாதம்	ஈதர்	– உயிரீந்தவர்
அண்டம்	– உலகம், வெளி	உரத்தன்	– ஊக்கம், ஞானம், வெற்றி உடையவன்
அண்டியவர்	– நெருங்கியவர்		
அந்தம்	– முடிவு		
அருள்	– கருணை	உரு	– வடிவு, உடல், அழகு
ஆதர்	– உயிரானவர்		
ஆர்	– அழகு, நிறைவு	உவப்பு	– விருப்பு, களிப்பு
		உறுதல்	– பொருந்துதல், தங்குதல்
ஆர்தல்	– அடைதல், பொருந்துதல்	உன்னி	– நினைத்து
இகல்	– பகை	ஏதர்	– மூலகாரணமானவர்
இமிழ்கடல்	– ஒலிக்கும் கடல்	ஏது	– காரணம்
இளவலன்	– தம்பி	ஏர்	– அழகு

ஏற்றம் – உயர்வு, புகழ்
ஒண் – ஒளி
ஒண்மறை – சிறப்பு வாய்ந்தவேதம்
ஒல்கா – தளர்விலா, குறைதல் இல்லாத
ஒன்றுதல் – பொருந்துதல்
ஓது – ஜெபஞ்செய், படி, சொல்லு
ஓர்ந்து – ஆராய்ந்து, நினைத்து, அறிந்து
கட்புலம் – பார்வை
காசினி – உலகம்
காணியம் – தீர்க்கதரிசனம்
கான் – மணம், காடு
கோன் – அரசன், கடவுள்
சாற்றும் – சொல்லும், விளம்பரப்படுத்தும்
சிவணிய – பொருந்திய, கலந்த
சீர் – நன்மை, சிறப்பு
சுரத்தல் – சொரிதல், நிறைதல்
செல் – கரையான்
தகவு – தகுதி, பெருமை
தண்வளி – குளிர்காற்று
துன்ன – பொருந்த, ஆலோசிக்க
தோயும் – படியும், பொருந்தும்
நயப்பு – பற்று, ஆசை
நறவு – தேன்
நன்னர் – நன்றாக
நாதன் – தலைவன்
நிண்ணயம் – உறுதி, ஏற்பாடு
நேர் – செவ்வை, உடன்படு
பரவொளி – மேலானஒளி
பன்ன – சொல்ல, ஆராய, புகழ
பாங்கு – அழகு, தகுதி, பக்கம்
பார் உய்ய – உலகம் ஈடேற
பீடு – பெருமை
புகன்றாய் – சொன்னாய்
புரர் – உடல் உடைய நரர்
பொன்ற – அழிய
போந்தாய் – பிரவேசித்தாய்
மட்டு – அளவு, தேன்
மயற்கை – மயக்கம்
மலர் – பூ, உள்ளம்
மறம் – பாவம்
மறி – ஆடு
மறை – வேதம், திருமறை
வடந்தை – வடதிசையிலுள்ளது
வடிமாலை – அழகிய நீளமாலை
வண்ணம் – வளப்பம்
வம்மின் – வாருங்கள்
வரன் – கடவுள், வரங்களை அருள்பவன்
விண்டவன் – பேசியவன், சொன்னவன்
வேய்ந்தேன் – சூடினேன்
வையகம் – பூமி.

ஆசிரியரின் பிற நூல்கள்

1. பவுலடியார் பாவியம்

இந்நூல் பவுலடியாரின் வாழ்க்கை வரலாற்றை முழுமையாகக் கூறுவது, திருமறைச் செய்திகள் பலவற்றையும், உலகவரலாற்றில் இடம் பிடித்தோர் சிலரைப்பற்றிய செய்திகளையும், யூதர் கிரேக்கர் உரோமர் ஆகியோரின் பழக்க வழக்கங்களையும் தெரிவிப்பது.

சுருங்கக்கூறின், இஃதொரு வரலாற்றுச் செய்யுள் நூல்.

2. கிறிஸ்துவின் அன்பு

கிறித்து இயேசு அன்புடையவர். அவர் அன்பு அளவிட்டுரைக்க இயலாதது. அவர்தம் சொல்லும் செயலும் உலகில் உள்ள எல்லாருக்கும் எக்காலத்தும் வழிகாட்டுவன; உய்விப்பன. அவ்வன்பினைப் பற்றி ஓரளவு உரைப்பதே இச்சிறுநூல்.

3. நன்னெறிக்குறள்

இது சாலமோன் ஞானியின் நீதிமொழிகளிலே பத்து வகையான தலைப்புகளுக்குப் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் 100 பாடல்கள் அமைய யாக்கப் பெற்றது.

4. இறைமகன் பிறப்பும் அருள் மகன் சிறப்பும்

இயேசு பெருமானின் பிறப்பு வரலாற்றையும், முழுக்கு முனிவர் யோவான் பற்றிய வரலாற்று நாடகத்தையும் கொண்டு விளங்குவது. இந்நூல் இளங்கலைஞர்கள் தங்களுக்கேற்ற வகையில் புதியன படைக்கப் பயன்படு முறையில் அமைந்தது.

ம.யோவேல்

7, எம்.எல்.பிள்ளைநகர்,

பாளையங்கோட்டை